**ஈ.** அப்.நட. 20: 26-27 - நாம் தேவனுடைய எல்லா ஆலோசனைகளையும் அறிவித்து அவற்றிற்கு அப்படியே கீழ்ப்படிய வேண்டும்.
**உ.** 2 தீமோத்தேயு 2:15 - நாம் எவைகளைக் கடைப் பிடிக்க வேண்டும், எவற்றிற்குக் கீழ்ப்படிய வேண்டும்என்பதை அறிய நாம் படிக்க வேண்டும்.
**ஊ.** 2 தீமோத்தேயு 3:14 - 4:4 – வேதவாக்கியங்கள் யாவும் தேவ ஆவியானவராலும் அவரது வழி நடத்துதலின்படியாகவும் அருளப்பட்டுள்ளன.
**எ.** யூதா 2 – நம்மிடத்தில் ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்காக – புதிய ஏற்பாட்டிற்காக - நாம் போராட வேண்டும்.

**தொடக்ககால சபையாரான, முதல் கிறிஸ்தவர்கள்,** கிறிஸ்துவின் இரட்சிப்பு பற்றிய நற்செய்தியை, அன்று அறியப்பட்டிருந்த உலகின் பெரும் பான்மையான பகுதிகளுக்கு ஒரு தலைமுறையிலேயே எடுத்துச் சென்றனர் [கொலோசெயர்1:23]. அச்சிடப்பட்ட துண்டுப்பிரதிகள், வானொலி, தொலைக்காட்சி அல்லது இணையம் போன்ற எவ்வித வசதிகளும் இல்லாமலேயே, அவர்கள், 70 ஆண்டுகளுக்கும் குறைவான காலத்திலேயே, தேவன் மீதான அன்பு, சத்தியத்தின் மீதான அன்பு மற்றும் இழந்துபோகப்பட்டு இருந்தவர்களின் மீதான அன்பு ஆகியவற்றால் தூண்டப்பட்டனர். எனவே அவர்கள், ஏறக்குறைய ஒவ்வொரு பெரிய நகரங்களிலும், பல சிறிய கிராமங்களிலும் கிறிஸ்துவின் சபைகள் நிலை நாட்டப்பட ஊழியம் செய்தனர்.

நமக்குக் கிடைத்துள்ள எல்லா தொழில்நுட்பம் மற்றும் மேம்பட்ட போக்குவரத்து வாய்ப்புக்கள் ஆகிவற்றின் மூலம் இன்று நாம் இன்னும் எவ்வளவு அதிகமாய் ஊழியம் செய்ய முடியும்? இழந்து போகப்பட்டுள்ளவர்களை மீட்கவும் சபையைக் கட்டியெழுப்பவும் நம்மிடம் அன்பும், பக்தியும், தியாகமும் இருக்க வேண்டும் தேவனின் கிருபை, மீட்பு மற்றும் சபை ஆகியவற்றின் உண்மையைக் கண்டுபிடித்து தெரிந்துகொள்ள வேண்டும்.

கிறிஸ்துவின் சபையினுடைய உறுப்பினர்களாகிய நாங்கள் உங்களை நேசிக்கிறோம். இன்று நீங்கள் சபையை கட்டுவதற்கும் இழந்துபோகப்பட்டவர்களை இரட்சிப்பதற்குமான தேவனுடைய திட்டம் பற்றி இச்சிறு கைப்பிரதியின்மூலம் அறிந்துகொண்டீர்கள். இரட்சிப்பின் திட்டம் பற்றி நீங்கள் மேலும் அறிய விரும்பினால் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்.

# சபையை கட்டுவதற்கும் இழந்துபோகப் பட்டவர்களை இரட்சிப்பதற்குமான தேவனுடைய திட்டம்

**வெளியிடுவோர்**
**கிறிஸ்துவின் சபை**
**கிறிஸ்துவே மார்க்கம் பயிலகம்**
**Email: christwaybible@gmail.com**

**சபையை கட்டுவதற்கும் இழந்துபோகப் பட்டவர்களை இரட்சிப்பதற்குமான தேவனுடைய திட்டம்**

உலகத் தோற்றத்திற்கு முன்பே தேவன் சபைக்கான திட்டங்களை வகுத்திருந்தார் [எபேசியர்1:4]. சபை எவ்வாறு வளரக்கூடும் மற்றும் சபை எவ்வாறு வளரும் என்பதையும், இழந்துபோகப்பட்டவர்களுக்கு இரட்சிப்பு தேவை என்பதையும் தேவன் அறிந்திருந்தார். கிறிஸ்துவின் முதல் சீஷர்களுக்கு, தேவன் தமது திட்டங்களை வெளிப்படுத்தினார். அவர்கள் அந்தத் திட்டங்களை, இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தபின்பு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாள்முதல் பின்பற்றினார்கள் [அப்.நட. 2:1-47].

இந்தத் தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் தங்களுக்குத் தேவன் தந்த வடிவமைப்பைப் பின்பற்றினார்கள் மற்றும் எருசலேமில் தொடங்கப்பட்ட சபையானது விரைவிலேயே யூதேயா, சமாரியா மற்றும் பூமியின் கடைசி பரியந்தமும் விரிவாக்கம் பெற்றது. இன்றைய நாட்களில் அந்தத் திட்டங்களையே நாமும் பின்பற்றினால், நற்செய்தியானது எங்கும் பரவும், சபை வளர்ச்சியுறும் மற்றும் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவார்கள். **[1பேதுரு1:18-20; 1கொரிந்தியர் 2:7; 2தீமோத்தேயு1:9 மற்றும் தீத்து 1:2]**

**அடிப்படை வசனப்பகுதிகள்:**
**மத்தேயு 28:18-20; மாற்கு 16:15-16**
**மற்றும் லூக்கா 24:44-47**

1. **"நீங்கள் புறப்பட்டுப்போய்" – கிறிஸ்தவர்கள் என்ற வகையில் சத்தியத்தைப் போதிக்க நமக்குத் தனிப்பட்ட பொறுப்புள்ளது.**
   - **அ.** 1 கொரிந்தியர் 1:19-20 - நாம் தேவனுடைய திட்டத்தையும் அவருடைய ஞானத்தையும் பின்பற்ற வேண்டும்.
   - **ஆ.** அப்போஸ்தலர் 8:4 - நாம் எல்லா இடங்களிலும் பிரசங்கிக்கவும் போதிக்கவும் வேண்டும்.
   - **இ.** 1 தீமோத்தேயு 4:16 - நாம் உபதேசத்தைச் சார்ந்திருந்து, உபதேசத்தின்படியாக வாழ்ந்து உபதேசத்தைப் போதிக்கவேண்டும்
   - **ஈ.** 2 தீமோத்தேயு4:2 – மக்கள் வசனத்தை ஏற்றுக் கொண்டாலும் அல்லது நிராகரித்தாலும் நாம் வசனத்தைப் பிரசங்கிக்கவும் போதிக்கவும் வேண்டும்.

2. **"உலகமெங்கும்" - உலகம் முழுவதும் இழந்துபோகப் பட்டுள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்!**
   - **அ.** எபேசியர் 4:17-19-உலகில் உள்ள பெரும்பான்மை மக்களுக்கு அவர்களின் மோசமான நிலை பற்றி தெரியாது.
   - **ஆ.** யோவான்3:16-18–உலகம் முழுவதும் ஆக்கினைத் தீர்ப்புக்கு உள்ளான படியால் கிறிஸ்து, மக்கள் எல்லாருக்காகவும் மரித்தார்.
   - **இ.** அப்போஸ்தலர்1:6-8– எல்லாரும் இழந்துபோகப் பட்டுள்ளதால் உலகம் முழுவதிலும் பிரசங்கிக்க வேண்டும்.
   - **ஈ.** அப்போஸ்தலர் 8:1-5 - நாம் எல்லா இடத்திற்கும் செல்ல வேண்டும்.

3. **"சர்வசிருஷ்டிக்கும்"(படைப்பு அனைத்திற்கும்) – மனித குலம் முழுமைக்கும் - ஒவ்வொரு நபருக்கும்–(மக்களின் தகுதியை) நீங்கள் முன்கூட்டியே மதிப்பிடாதீர்கள்.**
   - **அ.** ரோமர் 1:16 - நற்செய்தி எல்லா நாடுகளுக்கும் எல்லா மக்களுக்குமானது.
   - **ஆ.** அப்போஸ்தலர் 10:34-35 – தேவன் பட்சபாதம் உடையவர் அல்ல. ஒவ்வொரு மக்களினத்தையும் அவர் மதிக்கின்றார்.
   - **இ.** அப்போஸ்தலர் 15:11 – தேவனுடைய கிருபையினாலேயே அனைவரும் இரட்சிக்கப்பட முடியும்
   - **ஈ.** யாக்கோபு2:1,5 – நீங்கள் ஒருவருக்கும் பட்சபாதம் காண்பிக்காதீர்கள்.
   - **உ.** 1 கொரி. 1:26-29 – நம்மில் சிறந்தவர்கள் என்ற எண்ணம் கொண்டுள்ளவர்கள் பலவேளைகளில் சிறந்தவர்களாய் இருப்பதில்லை.

4. **"விசுவாசம் உள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" – இரண்டும் இதற்குத் தேவைப் படுகிறது.**
   - **அ.** அப்.நட. 2:37-41, 47 – பிரசங்கிக்கப்பட்ட முதல் பிரசங்கம், விசுவாசமும் ஞானஸ்நானமும்தேவை என்றது.
   - **ஆ.** அப்.நட.8:12,36-38 –அவர்கள்விசுவாசித்தபோது ஞானஸ்நானம் பெற்றார்கள்.
   - **இ.** அப்.நட.10:47-48 – முதன்முதலாகப்புறஇனத்தார் (யூதரல்லாத) மக்களினங்கள் விசுவாசித்தபோது ஞானஸ்நானம்பெறக் கட்டளை பெற்றனர்.
   - **ஈ.** அப்.நட.16:14-15-பிலிப்பியில்(லீதியாள் மற்றும்) அவள் குடும்பத்தார்)அவர்கள் விசுவாசித்தபோது ஞானஸ்நானம் பெற்றார்கள்
   - **உ.** அப்.நட.16:31-34 - பிலிப்பியில் இருந்த சிறை அதிகாரி விசுவாசித்த பிறகு ஞானஸ்நானம் பெற்றார்.
   - **ஊ.** அப்.நட.18:8 - கொரிந்தியர்களில் பலர் கேள்விப் பட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றனர்.
   - **எ.** அப்.நட.19: 1-5 - யோவான் ஸ்நானனின்கீழ் போதிக்கப் பட்டிருந்தவர்கள், விசுவாசித்த போது கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றார்கள்.
   - **ஏ.** அப்.நட.22:16 - சவுல் போதிக்கப்பட்டபின்பு, தன் பாவங்கள் கழுவிநீக்க ஞானஸ்நானம் பெற்றார்.

5. **"உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசியுங்கள்" – கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.**
   - **அ.** எபிரெயர்5:8-9– கீழ்ப்படிகிறவர்களுக்கு கிறிஸ்து இரட்சகராய் இருக்கின்றார்.
   - **ஆ.** அப்.நட.4:11-12 - கிறிஸ்துவுக்குள் மாத்திரமே இரட்சிப்பு உள்ளது [யோவான் 14:6].
   - **இ.** அப்.நட.5:29-நாம் மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும், நாம் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.